28.10.2024

C.C. No.126/2023

ம.சா. 1 <u>இராமசாமி</u>
<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் எந்த பகுதியில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் உதயம் நகர், சொக்கநாதபுரம், மறவர் தெரு, கோட்டையூரை சுற்றியுள்ள பகுதிகளில் TATA ACE வாகனத்தில் வியாபாரம் செய்து வருகிறேன். வியாபாரத்திற்கு எவ்வளவு முதலீடு மற்றும் லாபம் கிடைக்கும் என்றால் சுமார் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் முதலீடு செய்து ஒரு நாளைக்கு ரூ. 1000/– லாபம் கிடைக்கும். தினமும் ரூ. 1000/– லாபம் கிடைக்காது என்றால் ஒவ்வொரு நாளும் சராசரியாக ரூ. 1000/– கிடைக்கும். என்னை பொருத்தவரையில் ரூ. 25 லட்சம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான். எனக்கு தனிப்பட்ட முறையில் ரூ. 25 லட்சம் கொடுப்பதற்கு சக்தி கிடையாது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் நண்பர்களிடம் பணம் வாங்கி கொடுத்தாக சொல்லியிருக்கிறேன். ஆனால் நண்பர்களின் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு நபரிடமிருந்தும் எவ்வளவு தொகை வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எந்த சொத்தை, எவ்வளவு ரூபாய்கு, யாரிடம் அடமானம் வைத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சாட்சிபட்டியலில் வங்கி அதிகாரியை தவிர வேறு நபர்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எழில் நகரில் உள்ள முகவரிக்குதான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எவ்வளவு வருடங்களாக எதிரி அங்கு இருக்கிறார் என்றால் கடந்த 5, 6 வருடங்களாக இருக்கிறார்கள். அதற்கு முன்பாக உதயம் நகரில் உள்ள அவரது தகப்பனார் வீட்டில் இருந்தபோதிலிருந்து பழக்கம். எதிரிக்கு பாத்தியமான வீடு காரைக்குடி டி.டி நகரில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வீட்டை மட்டும் காண்பித்தார்கள். 1வது எதிரியின் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றாலும், அவர்களது பங்கு விபரம் தெரியுமா என்றாலும், அவர்களுக்கு 4 பங்குகள் இருப்பதாக கூறினார். மேற்படி

வீட்டின் சந்தை மதிப்பு தெரியுமா என்றால் சுமார் ஒன்றேமுக்கால் கோடி என்றார். மேற்படி எதிரி பாகப்பிரிவினை செலுத்தியபிறகு நல்ல விலைக்கு விற்கபோவதாக கூறிய போது நான் வாங்க முன்வரவில்லையா என்றால் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை.

3) ஒன்றேமுக்கால் கோடிக்கும் ரூ. 25 லட்சத்துக்கும் அதிக வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். எதிரியுடன் பிறந்த சகோதரிகள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் ரூ. 25 லட்சம் பணம் திரட்டியதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பணம் கொடுத்தவர்களை நேரடியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன். நான் எதிரிகளிடம் ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் அவர்கள் பூர்த்தி செய்த காசோலைகளை மட்டும் கொடுத்தனர். வேறு ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கவில்லை. 1, 2 எதிகள் இருவரும் காசோலையில் கையெழுத்து செய்யும் அதிகாரம் உள்ளதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவர்கள் இருவருக்கும் ஜாய்ன்ட் அக்கௌண்ட் என்பதால் கையொப்பம் செய்யலாம் என்று எதிரிகள் கூறினார்கள். எதிரிகளின் கணக்கு உள்ள வங்கி அதிகாரியை எனது தரப்பில் விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

4) எதிரிகள் காசோலைகளில் என் முன்னால் கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை அவர்கள் கையொப்பம் செய்துதான் கொண்டுவந்தார்கள். எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அதில் உள்ள விபரங்கள் தெரியும். நான் இவ்வழக்கில் எதிரியின் கையொப்பம் உள்ள ஒப்புதல் அட்டைகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரிகளுக்கு ரூ. 25 லட்சம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு பூர்வீக பாத்தியமான வீடு டி.டி நகரில் இருந்ததாகவும், அதை அவர்கள் விற்பனை செய்ய இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி வாடகைக்கு ஆட்டோ ஓட்டும் வேலை செய்கிறார் என்றால் சரிதான். பூர்வீக பாத்திய வீட்டில் இல்லாத எதிரியிடம் பிற பாகஸ்தரிடம் வீட்டை விட்டு

**கொடுக்கமார்ட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் சரியல்ல. மற்ற பாகஸ்தர்களை அறிமுகம் செய்து தனது பங்கை விற்பனை செய்வதாக சொன்னார். எதிரி என்னிடம் அவரச தேவைக்கா ரூ. 25 ஆயிரம் கடன் வாங்கியதாகவும் அதை தவறாக பயன்படுத்தி ரூ. 25 லட்சத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதலீட்டு தொகையில் ரூ. 25 ஆயிரம் ஒரு மாத தவணையில் நான் கடன் கொடுத்தேன் என்றாலும், 14.03.2024 அன்று கடன் பெற்றுவிட்டு 15.04.2024 அன்று எதிரி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. தாவா காசோலை தொலைந்து விட்டதாகவும் தேடித்தருவதாகவும் சொல்லிவிட்டு தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி